DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022 ம் ஆண்டு ஜுலை மாதம் 28 ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - முடிமன்னன் | **PW-26** | வயது |
| த/க பெயர் | | | தொழில் |
| கிராமம் | | | தாலூக்கா |
| மாவட்டம் | | | |

<u>முதல் விசாரணை:</u>-

நான் தர்மபுரி ஈட்டியாம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த பணி ஓய்வு பெற்று அரூரில் வசித்து வருகிறேன். கடந்த 27.08.2012 ம் தேதி ஈட்டியாம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த போது ரங்கன் என்பவர் கிராம உதவியாளராக இருந்தார். மேற்படி தேதியில் பாப்பிரெட்டிபட்டி காவல் ஆய்வாளர் கைபேசியில் என்னை அழைத்து முத்தானூர் கிராமத்திற்கு அன்றைய தினம் இரவு10 மணிக்கு நானும், எனத உதவியாளரும் வரவேண்டும் என்று சொன்னதின்பேரில் நாங்கள் இருவரும் சென்றோம். நான் சென்றபோது காவல்ஆய்வாளர், அருண், த/பெ. கோவிந்தராஜ், பூபேஷ், குமார் மற்றும் அசோகன் ஆகியோர் இருந்தனர். நாங்கள் அங்கு சென்றவுடன் காவல் ஆய்வாளர் அருண் மற்றும் பூபேஷ் என்பவர்களை கைது செய்வதாகக் கூறி எங்கள் முன்னிலையில் கைது செய்தார். கைது செய்தவுடன் அருண் மற்றும் பூபேஷ் ஆகியோரிடம் ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தார். அதில் நானும், உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அதில் ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். பூபேஷ் என்பவரது வாக்குமூலத்தில் நானும், உதவியாளரும் கையெழுத்து செய்தோம்.

அதில் ஆய்வாளரும் கையெழுத்து செய்தார். அருண் என்பவர் பின்னிட்டு வீட்டிற்கு அழைத்துச் சென்று செல்போன், TNPSC கேள்வித்தாள் மற்றும் விடைத்தாள் ஆகிய ஜெராக்ஸ் காப்பிகளை எடுத்துக் கொடுத்ததை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். அதில் நானும் உதவியாளரும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் அதில் கையொப்பம் செய்தார். என்னிடம் காட்டப்படும் அருணின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.**25 ஆகும். கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.**26 ஆகும். பின்னிட்டு பூபேஷ் என்பவரது வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ.**27 ஆகும். பூபேஷ் அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்று செல்போன், TNPSC கேள்வித்தாள் மற்றும் விடைத்தாள் ஆகிய ஜெராக்ஸ் காப்பிகளை எடுத்துக் கொடுத்ததை ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார்.அதில் நானும் உதவியாளரும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். ஆய்வாளர் அதில் கையொப்பம் செய்தார். அந்த மகசர் **அ.சா.ஆ.**28 ஆகும். எதிரிகளை கம்பையநல்லூர் காவல் நிலையத்திற்கு கூட்டிச் செல்வதாக சொல்லிவிட்டு போலீசார் கூட்டிச் சென்றனர். எதிரிகளை எனக்கு அடையாளம் தெரியும்(எதிரிகள் இன்று ஆஜரில் இல்லை). அருண் என்பவரிடமிருந்து கைப்பற்றிய செல்போன் **சா.பொ.16** ஆகும். அருண் என்பவரிடமிருந்து கைப்பற்றிய வினாவிடை புகைப்பட நகல் **அ.சா.ஆ.**29 ஆகும். பூபேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றிய செல்போன் **சா.பொ.17** ஆகும். பூபேஷ் என்பவரிடமிருந்து கைப்பற்றிய வினாவிடை புகைப்பட நகல் **அ.சா.ஆ.**30 ஆகும். இந்த வழக்கு குறித்து போலீசார் விசாரித்தார்கள்.

**<u>1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

**<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை:</u>**

போலீசார் என்னை முதல் முறை விசாரித்தபோது அவர் என்னை அழைபேசியில் அழைத்த விவரத்தைக் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. ஈட்டையாம்பட்டியிலிருந்து முத்தானூர் இரண்டு பர்லாங் இருக்கும். ஈட்டையாம்பட்டியிலிருந்து முத்தானூருக்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். 27.08.2012 ம் தேதி எனக்கு தகவல் வந்தபோது இரண்டு நபர்கள் காவல்

படுத்தப்பட்டதாக கூறப்பட்டது என்றால், சரிதான். அப்போது இரவு 22.00 மணி என்றால், சரிதான். தகவல் வரும்போது முத்தானூர் பேருந்து நிலையத்தில் காவல் படுத்தப்பட்டதாக தகவல் வந்தது என்றால், சரிதான். போலீசாரிடம் பேருந்து நிறுத்தத்திற்கு நான் சென்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான். நான் முத்தானூர் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றபோது மணி 10.10 இருக்கும். 10.10 மணிக்கு முத்தானூர் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றதாக நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். போலீசார் விசாரித்தபோது 22.00 மணிக்கு இரண்டு நபர்களை காவல்படுத்தியதாக சொல்லியுள்ளேனா என்றால், சொல்லியுள்ளேன். 22.00 மணிக்கு நான் ஈட்டையாம்பட்டியிலிருந்து தகவல் பெற்றதாக கூறப்படுவது உண்மை என்றால், சரிதான். 22.00 மணிக்கு முத்தானூர் பேருந்து நிறுத்தத்தில் எதிரிகளை ஆய்வாளர் காவல் படுத்தியதாக கூறுவது பொய் என்றால், சரியல்ல. 22.00 மணிக்கு முத்தானூர் பேருந்து நிறுத்தத்தில் ஆய்வாளர் எதிரிகளை காவல் படுத்தியபோது நான் அங்கு இல்லை என்றால், சரிதான். எதிரிகள் இருவரையும் எங்கிருந்து அழைத்து வந்தார்கள் என்பதும், எத்தனை மணிக்கு காவல்படுத்தினார்கள் என்பதும் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால், பேருந்து நிறுத்தில் எதிரிகளை வைத்துவிட்டுத்தான் எனக்கு தகவல் சொன்னார்கள். நான் குறிப்பிடும் பேருந்து நிறுத்தம் அரூரிலிருந்து தீர்த்தமலை செல்லும் சாலையில் உள்ளது. நான் பேருந்து நிறுத்தம் சென்றபோது பொதுமக்கள் யாரும் இல்லை. முதலில் வாக்குமூலம் ஆய்வாளரால் விசாரிக்கப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டது. ஆய்வாளர் லேப்டாப்பில் தட்டச்சு செய்தார். தட்டச்சு யார் செய்தார்கள் என்று எனக்குத் தெரியாது. பிரிண்ட் எடுக்கப்பட்டு, என்னிடம் கொடுக்கப்பட்டு கையெழுத்து போடச் சொன்னதுதான் எனக்குத் தெரியும் என்றால், சரிதான். பிரிண்ட் யாரால் எடுக்கப்பட்டது என்ற விவரமும் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். பிரிண்ட் எடுப்பதற்காக பென்டிரைவ் எதுவும் பயன்படுத்தப்பட்டதா என்ற விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. அங்கிருந்து முதலில் அருண் என்பவரது வீட்டிற்கு சென்றோம். அவரது வீடு முத்தானூரில் உள்ளது. அவரது வீடு எந்த வீதியில் உள்ளது என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரிதான். அது இரண்டு அடுக்குமாடி வீடு என விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். முத்தானூர் பேருந்து நிறுத்தத்தில் கையெழுத்து போட்டதைத் தவிர வேறு எங்கும் நான் கையெழுத்து போடவில்லை என்றால், சரிதான். அருண் என்பவரின் வீட்டிலிருந்து

மற்றொரு நபரின் வீடு சுமார் 1 கி.மீ தொலைவில் உள்ளது. அந்த பகுதியின் பெயர் காட்டுக் கொட்டாய் ஆகும். அது சிற்றூராட்சி ஆகும். செல்போனின் IMEI எண்கள் என் முன்னிலையில் பார்க்கப்பட்டதா என்றால், இல்லை. செல்போன்களில் எத்தனை சிம்கார்டுகள் இருந்தன என்பதும் பார்க்கப்படவில்லை, அதன் எண்கள் குறிக்கப்படவில்லை. கேள்வித்தாள்கள் எத்தனை தாள்கள் கொண்டது என்று எனக்குத் தெரியாது. அதில் என்னென்ன எழுதப்பட்டுள்ளது என்று படித்துப் பார்க்கவில்லை என்றால், சரிதான். போலீசார் என்னை அங்கு வரச்சொல்லி அழைப்பாணை கொடுத்தார்கள். போலீசார் என்னை அழைத்து நான் செல்வது எனது அலுவலகப் பணி அல்ல என்றால், சரிதான். நான் குறிப்பிட்டது போல போலீசார் என்னை அழைக்கவில்லை என்றாலும், நான் செல்லவில்லை என்றாலும், நான் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றாலும், சரியல்ல. எதிரிகளை தெரியும் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. போலீசார் கொடுத்த அழுத்தத்தின்பேரில் காவல்நிலையத்தில் தயாரித்த ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.91/2018**

Deposition of Witness

2022ம் ஆண்டு ஜுலை மாதம் 28ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - ரங்கநாதன் **PW-27** | வயது | |
| த/க பெயர் | | தொழில் | |
| கிராமம் | | தாலூக்கா | |
| மாவட்டம் | | | |

முதல் விசாரணை:-

நான் தற்போது தர்மபுரி மாவட்டம், வீரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.08.2012ம் தேதி ஈட்டியாம்பட்டி கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தபோது, இரவு 10 மணிக்கு கிராமநிர்வாக அலுவலர் முடிமன்னன் எனக்கு போன் செய்து, பாப்பிரெட்டிபட்டி ஆய்வாளர் முத்தனூர் பேருந்து நிறுத்தத்திற்கு வரச் சொன்னதாக எனக்கு தகவல் சொன்னார். நானும், கிராம நிர்வாக அலுவலரும் முத்தனூர் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம். நான் சென்று பார்த்தபோது ஆய்வாளரும், போலீசாரும், அருண், பூபேஷ், குமார் மற்றும் அசோகன் ஆகியோர் இருந்தனர். அருணும், பூபேஷ் என்பவரும் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தனர். 10 லிருந்து 12 மணி வரை அருணின் ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். 12 லிருந்து 1 மணி வரை பூபேசின் ஒப்புதல் வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்தார். ஒப்புதல் வாக்குமூலங்களில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிக் கையொப்பம் செய்தோம். அருணின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ**.31 ஆகும். பூபேஷ்

என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.32** ஆகும். அதன்பிறகு 1 மணியிலிருநது 1.30 மணிவரை அருணின் வீட்டிற்கு சென்று, வீட்டிலிருந்து அருண் எடுத்துக் கொடுத்த கைபேசி மற்றும் கையால் எழுதப்பட்ட வினாவிடைத்தாளை ஆய்வாளர் கைப்பற்றினார். மகசரில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். அது ஏற்கனவே அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு பூபேஷ் என்பவரின் வீட்டிற்கு சென்று, அவரது வீட்டிலிருந்து வினாத்தாள் மற்றும் கைபேசியை 2 மணியிலிருந்து 3 மணி வரை மகசரில் கைப்பற்றினார். அதில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தோம். அதுவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அருண் மற்றும் பூபேஷ் ஆகியோரைப் பார்த்தால் அடையாளம் தெரியும் (எதிரி ஆஜரில் இல்லை). எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அவைகள் சா.பொ.16 மற்றும் 17. அ.சா.ஆ.29 மற்றும் 30 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கு குறித்து ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>

<u>4, 6, 7, 8, 9, 11, 12, 18, 19, 22, 23, 24, 26 முதல் 30 வரையிலான எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை:</u>

ஈட்டியாம்பட்டியில் எனக்கு வீடு உள்ளது என்றால், சரிதான். என்னுடைய வீட்டிற்கும், கிராம நிர்வாக அலுவலரின் வீட்டிற்கும் சுமார் 30 மீட்டர் தொலைவு உள்ளது. நான் இரவு 10 மணிக்கு வீட்டிலிருந்தேன். கிராம நிர்வாக அலுவலர் என்னை வீட்டிற்கு வந்து அழைக்கவில்லை என்றால், சரிதான், போனில் அழைத்தார். முத்தனூர் பேருந்து நிறுத்தத்திற்கு ஆய்வாளர் வரச்சொன்னதாகவும், போகலாம் எனவும் அழைத்தார். என் வீட்டிலிருந்து முத்தனூர் பேருந்து நிறுத்தம் சுமார் 2 கி.மீ தொலைவில் உள்ளது. போலீசாரின் வேறு வழக்குகளில் சாட்சியாக இருந்திருக்கிறேன் என்றால், சரிதான். முத்தனூரில் பேருந்து நிலையம் இல்லை, பேருந்து நிறுத்தம் தான் உள்ளது. முத்தனூர் பேருந்து நிறுத்தத்தில் இரண்டு நபர்களை பிடித்து வைத்திருப்பதாக ஆய்வாளர் தகவல் சொன்னார் என்று கிராம நிர்வாக அலுவலர் கூறியதன் அடிப்படையில நாங்கள் அங்கு சென்றோம் என்றால், சரிதான். நானும், கிராம நிர்வாக அலுவலரும் வீட்டிலிருந்து

புறப்படும்போது மணி 10 ஆகும். நாங்கள் இருவரும் என் வீட்டிலிருந்து TVS XL வாகனத்தில் சென்றோம். நாங்கள் முத்தனூர் பேருந்து நிறுத்தத்திற்கு போய் சேர்ந்தபோது மணி 10.10 இருக்கும். 10 மணிக்கு எங்கள் முன்னிலையில் எதிரிகளை கைது செய்ததாக நான் போலீசாரிடம் வாக்குமூலம் கொடுத்து உள்ளேனா என்றால், இல்லை. மேற்படி இரண்டு நபர்களையும் எங்கு வைத்து, எத்தனை மணிக்கு கைது செய்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரிதான். நாங்கள் செல்வதற்கு முன்பு மேற்படி இரண்டு நபர்களை எந்ததெந்த வகையில் விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். நாங்கள் சென்ற பிறகு விசாரித்தார்கள். எங்களை விசாரித்து போலீசார் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால், இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்திற்கும், சாதாரண வாக்குமூலத்திற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும், ஒப்புதல் வாக்குமூலம் என்பது எதிரி தானாக முன்வந்து கொடுப்பது. ஆய்வாளர் விசாரித்தபோது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து அதில் என்னிடம் கையெழுத்து வாங்கினார். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. இரவு 10 லிருந்து 1 மணி வரை ஆய்வாளர் எதிரிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். மேற்படி சமயத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை. மேற்படி 3 மணி நேரமும் பேருந்து வந்து சென்றதா என்றால், இல்லை. ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் தட்டச்சு செய்தார்கள். மேற்படி வாக்குமூலம் பேருந்து நிறுத்தத்தில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. அங்கு இருந்த ஒரு கோவிலின் திண்ணையில் வைத்து தட்டச்சு செய்யப்பட்டது. லேப்டாப்பிலிருந்து பென்டிரைவ் போட்டு பிரிண்ட் எடுத்து வந்தார்கள். பென்டிரைவ்வை யார் எடுத்துச் சென்று, எங்கிருந்து பிரிண்ட் எடுத்து வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. மேற்படி பிரிண்ட் எத்தனை பக்கங்கள் எடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியாது. முத்தனூர் பேருந்து நிறுத்தத்திலிருந்து காவல் நிலையம் 6 கி.மீ தொலைவு இருக்கும். சம்பவத்தன்று பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் உள்ள பெட்டிக் கடை திறந்திருக்கவில்லை. வேறு எந்தக் கடையும் இல்லை. முத்தனூரில் பிரிண்ட் எடுப்பதற்கு என்று இடம் எதுவும் இல்லை என்றால், சரிதான். முத்தனூரில் இருந்து அரூர் 6 கி.மீ. தொலைவு, பாப்பிரெட்டிப்பட்டி 15 கி.மீ தொலைவு, கம்பையநல்லூர் காவல்நிலையம் 25 கி.மீ தொலைவு இருக்கும். பென்டிரைவ் எடுத்துச் சென்ற போலீஸ் எத்தனை மணி நேரம் கழித்து திரும்ப வந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி போலீஸ், போலீஸ் ஜீப்பில் சென்றார். அருண்

மற்றும் பூபேஷ் வீட்டிற்கு சென்று வந்த பிறகு பென்டிரைவ் எடுத்துச் சென்ற போலீஸ் திரும்ப வந்தாரா என்றால், வந்தார். அருண் மற்றும் பூபேஷ் வீட்டிற்கு சென்ற பிறகு மீண்டும் பேருந்து நிறுத்தத்திற்கு வந்தோமா என்றால், இல்லை. அருண் மற்றும் பூபேஷ் வீட்டிற்கு சென்றபோது ஒவ்வொரு வீட்டிலும் சுமார் ஐந்து, ஐந்து பேர் இருந்தார்கள். அருண் மற்றும் பூபேஷ் வீட்டிற்கு உள்ளே நான் செல்லவில்லை, வெளியில் நின்று கொண்டிருந்தேன். போலீசார் அருண் வீட்டிற்குள் சென்றார்கள். அருண் கொடுத்ததை வாங்கிக் கொண்டு வெளியில் வந்தார்கள். அவரது வீடு ஒரு கதவு மட்டும் உடைய வீடு என்றால், சரிதான். வீட்டிற்குள்ளே, யார் பொருளை எடுத்து, போலீசாருக்கு கொடுத்தார்கள் என்று நான் பார்க்கவில்லை என்றாலும், பென்டிரைவ் என்ன கலர் என்று நான் பார்க்கவில்லை என்றாலும், சரிதான். செல்போனில் எவ்வளவு சிம் கார்டு இருந்தது என்று எனக்குத் தெரியாது. பென்டிரைவ் இரும்பால் ஆனதா, பிளாஸ்டிக்கால் ஆனதா என்று எனக்குத் தெரியாது. மறுபடியும் பென்டிரைவை காட்டி என்னிடம் போலீசார் விசாரித்தார்களா என்றால், இல்லை. கைப்பற்றப்பட்ட வினாத்தாள்கள் சுமார் 59 பக்கங்கள் கொண்டது. மேற்படி வினாத்தாளில் இரண்டு பக்கங்களிலும் பதிவுகள் இருந்தது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.29 ல் ஒரு பக்கம் மட்டும்தான் எழுதப்பட்டுள்ளது என்றால், சில தாள்களில் இரண்டு பக்கங்களில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் இரண்டு பக்கங்களிலும் எழுதப்படவில்லை என்றால், சரிதான். 59 பக்கங்களிலும் பிரிண்ட் செய்யப்பட்டிருந்தது. பிரிண்ட் செய்யப்பட்ட ஆவணத்தை மீண்டும் போலீசார் என்னிடம் காட்டி விசாரித்தார்கள். என்னிடம் வாக்குமூலம் எதுவும் பிரிண்ட் செய்து வாங்கினார்களா என்றால், ஏற்கனவே பிரிண்ட் செய்யப்பட்டிருந்ததில் என்னிடம் வாங்கினார்கள். ஏற்கனவே பிரிண்ட் செய்யப்பட்ட வினாத்தாளை ஆய்வாளரிடம் கொடுத்து விட்டார்கள் நான் பார்க்கவில்லை. அதை பிரித்துப் பார்க்க போலீசார் என்னை அனுமதிக்கவில்லை என்றால், சரிதான். அதை எண்ணியும் பார்க்கவில்லை. செல்போனில் நம்பர் எழுதப்பட்டிருந்ததா என்றால், எந்த எண்ணையும் நான் பார்க்கவில்லை. செல்போனை ஆய்வாளர் இயக்கிப் பார்த்தாரா என்றால், இல்லை. செல்போனில் பதிவாகி இருந்த எண்ணை ஆய்வாளர் என்னிடம் காட்டினார். பிரிண்ட் எடுக்கச் சென்ற போலீசை நான் மீண்டும் சந்தித்தேனா என்றால், அதற்கு வாய்ப்பு இல்லை. பிரிண்ட் எடுக்கச் சென்ற போலீசை எந்த நேரத்தில் மீண்டும் பார்த்தேன் என்று குறிப்பாக

சொல்லமுடியாது என்றால், மீண்டும் பார்த்தேன், நேரம் குறிப்பாக சொல்ல முடியவில்லை. கோவிலில் இருந்து பூபேஷ் வீட்டிற்கு செல்வதற்கு முன்பு பிரிண்ட் எடுக்கச் சென்ற போலீஸ் வந்தாரா, இல்லையா என்றால், வந்தார். அதன்பிறகு பிரிண்ட் எடுக்கச் சென்ற போலீஸ், ஆய்வாளர் மற்றும் நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்றோமா என்றால், அவர்கள் ஜீப்பில் சென்றார்கள், நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். அருண் மற்றும் பூபேஷ் வீட்டிலிருந்து அந்த காவலர் பிரிண்ட் எடுக்க வேறு எங்கேயும் சென்றாரா என்றால் அது எனக்குத் தெரியவில்லை. அருண் வீட்டிற்கு முன்பு சுமார் 1.30 மணி நேரம் நின்றிருந்தோம். பூபேஷ் வீட்டிற்கு முன்பு சுமார் ½ மணி நேரம் நின்று கொண்டிருந்தோம். அருண் மற்றும் பூபேஷ் வீட்டிற்குள் செல்லும் முன்பு ஆய்வாளர் ஊர் முக்கியஸ்தர் யாரையேனும் வரவைத்தாரா என்றால் அது குறித்து எனக்குத் தெரியவில்லை. பூபேஷ் வீட்டிற்குள் சுமார் 1 மணி நேரம் ஆய்வாளர் விசாரணையிலிருந்தார். அந்த 1 மணி நேரமும் நான், காவலர் ஆகியோர் வீட்டிற்கு வெளியில் இருந்தோம். ஆய்வாளர், அருண் மற்றும் பூபேஷ் வீட்டிற்குள் லேப்டாப் எடுத்துச் சென்றாரா என்று நான் பார்க்கவில்லை. கோவிலில் லேப்டாப்பில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களைத் தவிர வேறு எங்கும் லேப்டாப்பில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரியல்ல, மகசரில் கையொப்பம் செய்தோம். நாங்கள் கையொப்பம் செய்த ஆவணங்களில் அருணும், பூபேசும் கையொப்பம் செய்தனர். பூபேஷ் வீட்டிலிருந்து சிம்கார்டுடன் கூடிய செல்போன்கள் எடுக்கப்பட்டதா என்றால், அவர் கொடுத்த சிம்கார்டுடன் கூடிய செல்போன் கைப்பற்றப்பட்டது. மேற்படி சிம்கார்டின் எண் குறித்துக் கொள்ளப்பட்டது. அதை பேனாவில்தான் எழுதினார்கள். நானும், கிரம நிர்வாக அலுவலரும் முத்தனூர் செல்லும்போது எங்கள் உயர் அதிகாரிகளிடம் தகவல் சொல்லித்தான் சென்றோம். அ.சா.ஆ.26 ல் எத்தனை பத்தி இருந்தது என்று எனக்குத் தெரியாது. மேற்படி பத்திகளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். அதை ஆய்வாளர் சொல்லி போலீசார் எழுதினர். மேற்படி ஆவணம் எத்தனை பக்கங்கள் இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால், சரிதான். மகசரில் 2 கையெழுத்து போட்டேன், ஒப்புதல் வாக்குமூலத்தில்தான் 4 கையெழுத்து செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தின் ஆரம்ப பத்தியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியாது. அதை எதிரி சொல்லித்தான் ஆய்வாளர் எழுதினார். என்னுடைய

பெயர், விலாசம், அப்பா பெயர், தொழில் அனைத்தும் எதிரிக்கு தெரியும் என்றால், சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. என்னுடைய அலுவலகம் தொடர்பான கையெழுத்துக்களில் தேதி இட்டு கையெழுத்திடும் வழக்கம் உள்ளது. அருண் மற்றும் பூபேஷ் வீடுகளில் எந்தெந்த இடங்களில் எந்தெந்த பொருட்கள் இருந்தது என்ற விவரம் என் முன்னிலையில் சொல்லப்படவில்லை என்றால், சரிதான். அந்த வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று என்னால் தற்போது சொல்ல முடியாது என்றால், சரிதான். நான் கையொப்பம் இட்ட ஆவணங்களில் தற்போது என்ன எழுதப்பட்டுள்ளது என்று சொல்ல முடியாது என்றால், சரிதான். போலீசார் எழுதிக் கொடுக்கும் ஆவணங்களில் கையெழுத்து போட வேண்டியது என் வேலை என்றால், சரிதான். நான் போலீஸ் அதிகாரிகளின் வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டவன் என்றால், சரிதான். எனது உயர் அதிகாரிகள் மற்றும் போலீசார் சொல்லும் வார்த்தைகளை தட்டும் வழக்கம் எனக்கு இல்லை என்றால், சரிதான். சிபிசிஐடி போலீசார் என்னை எங்கு, எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்குத் தெரியாது. நான் இதுவரை 3 குற்ற வழக்குகளில் சாட்சி சொல்லியுள்ளேன். 3 வழக்குகளிலும் போலீசார் கேட்டுக் கொண்டால் கையெழுத்துப் போடுவேன் என்றால், நான் ஆஜரான வழக்குகளில் கையெழுத்து போட்டுள்ளேன். மேற்படி 3 வழக்குகளிலும் காவல் துறையின் நிர்பந்தத்தின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் சொன்ன தேதியில், விதத்தில், நேரத்தில், எந்த இடத்திற்கும் நான் செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட ஆவணங்களில், காவல் துறையின் நிர்பந்தத்தின் பேரில், காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, காவல் துறையின் அறிவுறுத்தலின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. கைப்பற்றப்பட்ட செல்போன்கள் என்னென்ன நிறங்கள் கொண்டது என்று மகசரில் எழுதப்பட்டது. போலீசார் என்னை விசாரித்தபோது எந்தெந்த எதிரிகளிடமிருந்து, எந்தெந்த செல்போன் கைப்பற்றப்பட்டது என்று சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. நான் கூறியது போல் கிராம நிர்வாக அலுவலர் எப்போதும் என்னுடன் வரவில்லை என்றால், சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>